திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, அரசு ஆணை பிறப்பித்த பிறகும் இது நடைமுறையில் கையாளப்படுவதாகத் தெரியவில்லை. ஆகையால், நடைமுறையில் செயல்படுத்தாதவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, பெர்மனென்ட் அண்ட் செமி பெர்மனென்ட் என்று சொல்லப்படுகின்றவைகளுக்கு பெஞ்ச் போட வேண்டுமென்று விதி. இடையிலே நிரந்தரமாக கட்டட அமைப்பை மாற்றி அமைக்கவேண்டுமென்று, மாற்றி அமைக்கின்ற காலத்திற்குத்தான் போடவேண்டியதில்லை. அப்படி யாரும் போடாமல் இருந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, தரை டிக்கட்டுகளுக்குப் பதிலாக பெஞ்ச் போட்டப்பட்டிருக்கிற நேரத்திலே கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. சினிமாவுக்கு பொழுதுபோக்குக்காக போகிறோம். அங்கே புகை பிடிக்கக் கூடாது என்று சட்டம் போட்டிருக்கிறோம். சினிமாவுக்குப் போனால், ஊளை இடுவதையும், விசில் அடிப்பதையும் கேட்க வேண்டியிருக்கிறது. பொழுதுபோக்குத் தன்மையைக் கெடுக்கின்ற இந்த ஊளை இடுவதையும், விசில் அடிப்பதையும் தடுக்க சட்டம் போட முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, சட்டம் ஒன்றும் போட முடியாது. சினிமாக் கொட்டகையில் விசில் அடிக்கிறவர்கள் அதோடு நின்றுவிட்டால் போதுமானது. அந்த வியாதி வெளியிலே பரவாமல் இருந்தால் நல்லது என்று கருதுகிறேன்.

Electrocution cases in Velachery.

*510 Q.—THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Electricity be pleased to state :—

(a) whether a number of cows were electrocuted at Velachery near Madras about the 6th September 1973 at public places; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) & (இ) சென்னைக்கு அருகில் வேளச்சேரியில் 1973 செப்டம்பர் 6 ஆம் நாளன்று 6 மாடுகளும், ஒரு எருதும் மின்சாரம் பாய்ந்து இறந்தன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]